# நம்மாழ்வார் அருளிச் செய்த
# திருவாய்மொழி
# மூன்றாம் பத்து

## பத்தாம் திருவாய்மொழி - சன்மம்பலபல
## எம்பெருமானது அவதார குணசேஷ்டிதங்களை அநுபவிக்கையாலே தமக்கு ஒரு குறையுமின்றி எல்லா இஷ்டங்களும் உண்டானமையை அருளிச் செய்தல்

** சன்மம் பல பல செய்து வெளிப்பட்டுச் *
சங்கொடு சக்கரம் வில் *
ஒண்மை உடைய உலக்கை ஒள்வாள் * தண்டு
கொண்டு புள் ஊர்ந்து ** உலகில்
வன்மை உடைய அரக்கர் * அசுரரை
மாளப் படை பொருத *
நன்மை உடையவன் சீர் பரவப் பெற்ற *
நான் ஓர் குறைவு இலனே 1

குறைவில் தடங்கடல் கோள் அரவேறித் * தன்
கோலச் செந்தாமரைக் கண் *
உறைபவன் போல ஓர் யோகு புணர்ந்த *
ஒளி மணி வண்ணன் கண்ணன் **
கறை அணி மூக்குடைப் புள்ளைக் கடாவி *
அசுரரைக் காய்ந்த அம்மான் *
நிறை புகழ் ஏத்தியும் பாடியும் ஆடியும் *
யான் ஒரு முட்டிலனே 2

முட்டில் பல் போகத்து ஒரு தனி நாயகன் *
மூவுலகுக்கு உரிய *
கட்டியைத் தேனை அமுதை * நன்பாலைக்
கனியைக் கரும்பு தன்னை **
மட்டு அவிழ் தண் அந்துழாய் முடியானை
வணங்கி * அவன் திறத்துப்
பட்ட பின்னை * இறை ஆகிலும் * யான் என்
மனத்துப் பரிவிலனே 3

பரிவின்றி வாணனைக் காத்தும் என்று * அன்று
படையொடும் வந்து எதிர்ந்த *
திரிபுரம் செற்றவனும் மகனும் * பின்னும்
அங்கியும் போர் தொலைய **
பொரு சிறைப் புள்ளைக் கடாவிய மாயனை *
ஆயனைப் பொற்சக்கரத்து
அரியினை * அச்சுதனைப் பற்றி * யான்
இறையேனும் இடர் இலனே 4

இடர் இன்றியே ஒரு நாள் ஒரு போழ்தில் *
எல்லா உலகும் கழிய *
படர் புகழ்ப் பார்த்தனும் வைதிகனும் *
உடன் ஏறத் திண் தேர் கடவி **
சுடர் ஒளியாய் நின்ற தன்னுடைச் சோதியில் *
வைதிகன் பிள்ளைகளை **
உடலொடும் கொண்டு கொடுத்தவனைப் பற்றி *
ஒன்றும் துயர் இலனே 5

துயர் இல் சுடர் ஒளி தன்னுடைச் சோதி *
நின்ற வண்ணம் நிற்கவே *
துயரில் மலியும் மனிசர் பிறவியில் *
தோன்றிக் கண் காண வந்து **
துயரங்கள் செய்து தன் தெய்வ நிலை உலகில் *
புக உய்க்கும் அம்மான் *
துயரம் இல் சீர்க் கண்ணன் மாயன் புகழ் துற்ற *
யான் ஓர் துன்பம் இலனே 6

துன்பமும் இன்பமுமாகிய * செய் வினையாய்
உலகங்களுமாய் *
இன்பம் இல் வெந்நரகாகி * இனிய
நல் வான் சுவர்க்கங்களுமாய் **
மன் பல் உயிர்களும் ஆகிப் * பல பல
மாய மயக்குகளால் *
இன்புறும் இவ்விளையாட்டு உடையானைப் பெற்று *
ஏதும் அல்லல் இலனே 7

அல்லல் இல் இன்பம் அளவு இறந்து எங்கும் *
அழகமர் சூழ் ஒளியன் *
அல்லி மலர் மகள் போக மயக்குக்கள் *
ஆகியும் நிற்கும் அம்மான் **
எல்லை இல் ஞானத்தன் ஞானம் அஃதே கொண்டு *
எல்லாக் கருமங்களும் செய் *
எல்லை இல் மாயனைக் கண்ணனைத் தாள் பற்றி *
யான் ஓர் துக்கம் இலனே 8

துக்கம் இல் ஞானச் சுடர் ஒளி மூர்த்தி *
துழாய் அலங்கல் பெருமான் *
மிக்க பல் மாயங்களால் விகிர்தம் செய்து *
வேண்டும் உருவு கொண்டு **
நக்க பிரானோடு அயன் முதல் ஆக *
எல்லாரும் எவையும் * தன்னுள்
ஒக்க ஒடுங்க விழுங்க வல்லானைப் பெற்று *
ஒன்றும் தளர்விலனே 9

தளர்வு இன்றியே என்றும் எங்கும் பரந்த *
தனி முதல் ஞானம் ஒன்றாய் *
அளவுடை ஐம்புலங்கள் அறியா வகையால் *
அருவாகி நிற்கும் **
வளர் ஒளி ஈசனை மூர்த்தியைப் * பூதங்கள்
ஐந்தை இரு சுடரை *
கிளர் ஒளி மாயனைக் கண்ணனைத் தாள் பற்றி *
யான் என்றும் கேடிலனே 10

** கேடில் விழுப் புகழ்க் கேசவனைக் *
குருகூர்ச் சடகோபன் சொன்ன *
பாடல் ஓர் ஆயிரத்துள் * இவையும் ஒரு பத்தும்
பயிற்ற வல்லார்கட்கு ** அவன்
நாடு நகரமும் நன்குடன் காண *
நலன் இடை ஊர்தி பண்ணி *
வீடும் பெறுத்தித் தன் மூவுலகுக்கும்
தரும் * ஒரு நாயகமே 11

**ஆழ்வார் திருவடிகளே சரணம்**

---